# Official Spokesperson's response to media queries on the the issuance of a Joint Declaration between the Afghan and US Governments in Kabul and signing of the US-Taliban Agreement in Doha

February 29, 2020

---

## காபூலில் ஆப்கானிஸ்தான் மற்றும் அமெரிக்க அரசாங்களுக்கிடையில் ஒரு கூட்டு பிரகடனத்தை வெளியிடுவது மற்றும் தோஹாவில் அமெரிக்க-தலிபான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது தொடர்பான ஊடகக் கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தி தொடர்பாளர் அளித்த பதில்

பிப்ரவரி 29,2020

காபூலில் ஆப்கானிஸ்தான் மற்றும் அமெரிக்க அரசாங்களுக்கிடையில் ஒரு கூட்டு பிரகடனத்தை வெளியிடுவது மற்றும் தோஹாவில் அமெரிக்க-தலிபான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது தொடர்பான ஊடகக் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அதிகாரப்பூர்வ செய்தி தொடர்பாளர் ஸ்ரீ அனுராக் ஸ்ரீவத்சவா கூறியதாவது:

"ஆப்கானிஸ்தானில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை கொண்டு வரக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் ஆதரிப்பதே இந்தியாவின் நிலையான கொள்கை; வன்முறையை முடிவுக்கு கொண்டு வருதல்; சர்வதேச பயங்கரவாதத்துடனான உறவுகளை வெட்டுதல்; மற்றும் ஆப்கான் முன்னெடுப்பில்,ஆப்கானுக்கு சொந்தமான மற்றும் ஆப்கான் ஆளுகைக்கு நிலையான அரசியல் ஸ்திரத்தன்மை உருவாக்கல்.

அரசாங்கம், ஜனநாயக அரசியல் மற்றும் சிவில் சமூகம் உட்பட ஆப்கானிஸ்தானில் முழு அரசியல் ஸ்பெக்ட்ரம் இந்த ஒப்பந்தங்களால் உருவாக்கப்பட்ட அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான வாய்ப்பையும் நம்பிக்கையையும் வரவேற்றுள்ளது என்பதை நாங்கள் கவனிக்கிறோம்.

ஒரு தொடர்ச்சியான அண்டை நாடாக ஆப்கானிஸ்தான் சமூகத்தின் அனைத்து தரப்பினரின் நலன்களும் பாதுகாக்கப்படும் அமைதியான, ஜனநாயக மற்றும் வளமான எதிர்காலத்திற்கான அவர்களின் அபிலாஷைகளை உணர்ந்து கொள்வதில் இந்திய அரசாங்கத்திற்கும் ஆப்கானிஸ்தான் மக்களுக்கும் அனைத்து ஆதரவையும் அளிக்கும்".

**நியூ டெல்லி**
**பிப்ரவரி 29, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.